**R 5718 (page 199)**

# சோதனைக் காலம்

## "THE HOUR OF TEMPTATION"

"என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்."
- (வெளிப்படுத்தல் 3:10)

நமது கர்த்தர் "பிலதெல்பியா சபையின் தூதனுக்கு சொன்ன வார்த்தைகள், அதன் (பிலதெல்பியா சபையின்) முடிவு காலத்தில் அதாவது இந்த யுகத்தின் அறுவடை ஆரம்பித்தபொழுது நிறைவேறிவிட்டது என்று நாம் புரிந்து கொள்கிறோம், பல்வேறு சபைக்கான செய்தியில் ஒவ்வொரு சபையின் ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியும் முடிவில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியும் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதை வெவ்வேறு சகாப்தம் என்று நாம் எண்ணலாகாதுஇ அதைக் காட்டிலும் ஒவ்வொன்றும் பொதுவான காலப்பகுதி என்று புரிந்து கொள்ள வேண்டும். அது ஒன்றின் மேல் ஒன்று ஏறியிருக்கின்றது. நமது தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்படுகிற கர்த்தரின் வசனத்திற்கு உண்மையாய் உள்ள இந்த காலப்பகுதி நாம் இப்போது இருக்கக்கூடிய லவோதிக்கேயா காலப்பகுதியைப் போல இருப்பதாக காணப்படுகிறது. இந்த லவோதிக்கேயா காலப்பகுதியில் அதிகமான காலத்தை கழித்துவிட்டோம், அது இப்போது கிட்டதட்ட முடியும் தருவாயில் இருப்பதாக நாம் நினைக்கிறோம்.

நீண்ட காலமாக தேவனுடைய வசனத்திற்கு மதிப்பு குறைவாக இருந்தது. மோசமான புரிந்து கொள்ளுதலிருந்து நல்ல புரிந்து கொள்ளுதலுக்கு வருவது படிப்படியாக நிகழ்ந்தது. தேவனுடைய இரண்டு சாட்சிகளாகிய பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் உயிரற்ற நிலையில் இரட்டு வஸ்திரம் உடுத்தியிருந்து படிப்படியாக பரலோகத்திற்கு கனத்திற்கும் வல்லமைக்கும் எழுந்தருளியது. இதை வேத வாக்கியங்கள் அடையாளமாக குறிப்பிடுகிறது. (வெளி 11:3-2) அதன்பிறகு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிய பொதுவான அறிவிப்பு வந்தது. இது சில சமயம் உல்ஃபு (**wolf**) இயக்கம் என்றும் சில சமயம் மில்லர் இயக்கம் என்றும் அழைக்கப்பட்டது. ஏனெனில் அதன் தலைவர் உலகின் ஒரு பகுதியிலும், மற்றவர் உலகின் மற்ற பகுதியிலும் இருந்தனர். இந்த நேரத்தில் அமெரிக்காவானது உலகின் மேம்பட்ட சிந்தனைக்கு பிரதிநிதியாக இருந்தது. கிறிஸ்துவின் ராஜ்யத்தைப் பற்றிய அறிவிப்பு ஒரு குறிப்பிடத்தகுந்த இயக்கமாக இருந்தது. நமது கர்த்தர் தீவட்டிகளை பிடித்திருந்த பத்து கன்னிகைகளைக் குறித்த உவமையில் இது குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் அது ஒரு தவறான எச்சரிப்பு - மணவாளன் வரவில்லை.

### மில்லர் இயக்கத்தின் ஏமாற்றம் ஒரு தூற்றுதல்

தேவனுடைய ஜனங்களாக ஒப்புக் கொள்ளப்பட்டவர்களிடையே இந்த ஏமாற்றம் ஒரு தூற்றுதலுக்கு காரணமானது. சிலர்இ வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று நினைத்து அதில் அதிக ஆர்வம் உள்ளவர்களானார்கள், அவர்கள் சந்தேகங் கொள்ளவில்லை. ஆனால் மற்றவர்கள் அகந்தையுள்ளவர்களாகவும் நாத்திகனாகவும் மாறி வேதாகமத்தை பழைய முட்டாள்தனமான புத்தகம் என்றும் இந்த தீர்க்க தரிசனங்களில் கவனம் செலுத்துகிறவர்கள் எல்லாம் முட்டாள்தனமானவர்கள் என்றும் அறிவித்தனர். ஆகையால் இவர்கள் தேவனுடைய வார்த்தையை கைக்கொள்ளவில்லை, அதனால் அதன் பிரகடனத்தை ஒதுக்கினார்கள். நமது

ஆண்டவரின் இரண்டாம் வருகையைப் பற்றிய வேதாகமத்தின் வாக்குத்தத்தங்களும் தீர்க்கதரிசனங்களும் அதிகமாகவும் நிச்சயமானதாக இருந்தும் பெரும்பாலான பெரிய போதகர்களால் அலட்சியம் பண்ணப்பட்டது. அதன் காரணமாக ஜனங்கள் மிகக் குறைவாகவே வேதாகமத்தைப் பற்றி அறிந்தனர். நிச்சயமாக அவர்களது அறிவைக் காட்டிலும் அவர்களது விசுவாசம் அதிகமாக இல்லை.

மில்லர் இயக்கத்தின் ஊழியத்தின் பலனாக தேவனுடைய வசனத்தை பொறுமையுடன் கைக்கொண்டவர்களுக்கும் அவரது வசனத்தில் நம்பிக்கை இழந்தவர்களுக்கும் இடையே ஒரு பிரிவினை உண்டாயிற்று. தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்களின் இந்த உறுதியும் பொறுமையுடனான விசுவாசமுமேஇ “என் பொறுமையைக் குறித்து சொல்லிய வசனத்தை” காத்துக் கொள்ளுதல் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று நாங்கள் நினைக்கிறோம். ஆகையால் பொதுவான சோதனைக் காலம் அவர்கள் மேல் வரவில்லை. ஆனால் அவர்களுக்கு பின் வந்தவர்கள் மேல் லவோதிக்கேயா சபைமேல் வந்தது. பிலதெல்பியா சபையின் விசுவாசத்தின் மேல் வந்த தீவிரமான ஒரு சோதனையானது, அமைதியாக கடந்து சென்றது; பின்னர் வருகிற சோதனையில் அது கீழ்ப்படுத்தப் படாது.

“சோதனைக்காலம்” இப்போது நம்மேல் வந்திருக்கிறது. இந்த சோதனைக்காலம் அறுவடை காலமாக இருக்கிறது. பல வகைகளிலும் இந்த கர்த்தருடைய பிள்ளைகளை சோதித்து யார் தேவனுடைய வசனத்திற்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள், யார் உண்மையுள்ளவர்களாக இல்லை என்பதையும் நிரூபித்திருக்கிறது. ஆகையால், பெரும்பாலான அதாவது நான்கில் மூன்று பங்கு கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் வேதாகமத்தில் தங்கள் விசுவாசத்தை இழந்திருக்கிறார்கள்; பரிணாமம், அதிக கண்டனம், கிறிஸ்தவ விஞ்ஞானம்இ பிரம்ப ஞானம், ஆவியுலகம், புதிய சிந்தை முதலான நமது கால தப்பறையான, பொய்யான கொள்கைகளில் விழுந்திருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையின் விசுவாசத்திலும் உண்மைத்தன்மையிலுமிருந்து விழுந்துவிட்டார்கள். இந்த தீங்கு நாளில்” அவர்களால் நிலைநிற்க இயலவில்லை.

## கொஞ்ச காலம் விசுவாச வீழ்ச்சி

இந்த “தீங்கு நாளின்” சோதனைகள்இ சபையில், “தேவனுடைய வீட்டில்” ஆரம்பித்தாலும் அதோடு அது முடிவடைவதில்லை. இந்த சோதனைக்காலம் “பூமியில் குடியிருக்கிறவர்களை சோதிக்கும்படியாக பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரும்.” இந்த சோதனை, பரீட்சை ஒவ்வொரு தேசத்தின் மேலும், விசேஷமாக கிறிஸ்தவ தேசங்களின் அனைத்து பகுதிகளிலும் செல்லும். இந்த கடுமையான அனுபவங்கள் அநேகரை கடந்து செல்லும் போது தேவன் இருக்கிறார் என்பதிலே சந்தேகத்துக்கு ஆளானார்கள். முன்னரே வந்திருக்கிற இப்படிப்பட்ட கடுமையான பேரிடர்களை இன்னும் வரப்போகிற இன்னும் அதிகமான பேராபத்துகளை அனுமதிக்கிற தேவனை அவர்களால் மனதில் சிந்திக்க முடியவில்லை. தேவனுடைய மகா திட்டங்களை அறியாமலும் தற்கால நிலைமையின் மகிமையான விளைவையும் அகில உலகத்தின் மேலும் இருண்ட மேகத்தில் தங்கக் கம்பியையும் காணாமலும் ஜனங்கள் உயர்ந்த அரசாங்கத்தின்மேல் அனைத்து நம்பிக்கைகளையும் இழப்பார்கள். பரிதாபகரமான மனுக்குலம் தேவனுடைய வசனத்தினால் அறிவு பெறாமல், அறியாமை மற்றும் குருட்டுத்தனத்திலும் இருந்து, வருகின்ற ராஜ்யத்தையும் அது எவ்விதமாக ஆரம்பிக்கப்படும் என்பதையும், அது ஆரம்பிக்கப்படுவதின் நோக்கமும் இலக்கும் என்ன என்பதையும் அறியாமல் இருக்கிறார்கள்.

ஆகவே தற்கால ஆபத்து நிச்சயமாக உலகத்தின் மீதான மகா சோதனைக்காலம். “இவர்களில் பெரும்பாலோர் ஒரு பெயரளவான சபையை அமைத்திருக்கிறார்கள். இந்த சோதனை மற்றும் அசைக்கப்படும் காலத்தில் அனைத்து பேர் சபை அமைப்புகளும் நொறுக்கப்படும். பாபிலோன் விழுந்து போகும். ஏனெனில் இந்த மகா சோதனை காலத்தில் நிலைநிற்க அவளுக்கு திராணியோ தகுதியோ இல்லை. அவளது விழுகை மகா பெரிதாயிருக்கும்! கொஞ்சம் காலம் அது

விசுவாசிகளின் பொதுவான அழிவாக, விசுவாசிகளின் விழுகையாக இருக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம். அது, "கர்த்தர் தமது கிரியையாகிய அபூர்வமான கிரியையைச் செய்யவும், தமது வேலையாகிய அபூர்வமான வேலையை நிறைவேற்றவும் அவர் பெராத்சீம் மலையிலே எழும்பினது போல எழும்பி, கிபியோனின் தீங்கு நாளில்" அவர்களால் நிலைநிற்க இயலவில்லை. பள்ளத்தாக்கில் கோபங்கொண்டது போல கோபங்கொள்வார்"என்ற தீர்க்கதரிசனத்தின்

**R5718 : page 200**

அர்த்தத்தைப் போல காணப்படுகிறது. (ஏசாயா 28:21) வசனத்தை கவனியாமலும் புரிந்து கொள்ளாமலும் இருப்பவர்கள் கவிழ்க்கப்படுவார்கள்.

## பிலதெல்பியா சபை தப்பித்து

பிலதெல்பியா சபையானது சோதனை நாளில் காக்கப்பட்டு, அந்த சபையின் காலத்தினர் சிலர் தற்காலப்பகுதி வரைக்கும் ஜீவிப்பார்கள். இந்த காலத்தின் விசேஷித்த சோதனையில் அவர்களை கர்த்தர் கீழ்ப்படுத்தமாட்டார் என்று நாங்கள் நினைக்கிறோம். உதாரணமாக, நாம் குறிப்பிடுகிற இந்த காலத்தில் ஒரு வயதான கனவான் தொண்ணூறு வயதுள்ளவர் இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் ஒரு சபையின் போதகராக இருந்தார். அவர் தற்கால சத்தியத்தை மிகவும் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டு அதிக வைராக்கியத்துடன் பேசுகிறதாகக் காணப்பட்டார்இ ஆனால் அவரது வீட்டில் அதிகமான எதிர்ப்பு இருந்தது. அவர் ஊழியராக இருக்கும் அவரது சபையிலும் அவரது மனதின் தீர்மானத்தை நம்புவதாகக் காணப்படவில்லை. அவர் தெளிவாக இப்படியாக சிந்திக்கிறார்; "எனக்கு தொண்ணூறு வயதாகிறது. எனது சொந்த தீர்மானத்தை என்னால் நம்ப முடியவில்லை. நான் தெருவில் போக வேண்டும் என்றால் யாராவது என் கையை பிடித்துக் செல்லவேண்டும். எதற்கும் மற்றவர்களை நம்பி இருக்க வேண்டி உள்ளது. இதுதான் தேவனுடைய சித்தமானால் எந்த அளவான எதிர்ப்பையும் நான் சகித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் என்னால் உறுதியாக சொல்ல முடியவில்லை."

சில சமயம் அந்த வயதான கனவானைஇ ஒரு பெரிய சபையின் பிரதிநிதியாக இருப்பவரை நினைக்கிறோம். அவர் தமது நிலையை உறுதிப்படுத்தி பாபிலோனை விட்டு வெளியே வரமுடியவில்லை என்று நாம் பரிதாபப்படுகிறோம். அவர் மற்றும் அவரைப் போன்ற மற்றவர்களைப்பற்றியும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிற வசனம் நமது மனத்திற்கு ஆறுதலை தருகிறது. இவைகள் கர்த்தருடைய வசனத்திற்கு விசுவாசத்தையும், அதை அவர்கள் புரிந்து கொள்கிற அளவுக்கான உண்மைத்தன்மையையும் நிரூபிப்பதாகக் காணப்படுகிறது. இவர்களில் யாராவது ஒருவர் அறுவடை காலத்திற்குள் வருவதாக இருந்தால், அவர்கள் அறுவடை காலத்தில் இருப்பதாக எண்ணப்படமாட்டார்கள். ஆனால் நாம் இதை உறுதியாக சொல்லமுடியாது. ஆனால் பிலதெல்பியா காலத்தை சேர்ந்தவர்கள் லவோதிக்கேயா சபையின் மேலும் உலகத்தின் மேலும் வருகிற சோதனைகளிலிருந்து அவர்கள் தப்பிப்பார்கள் என்பதே கர்த்தரின் வாக்குத்தத்தம் என்பதை மட்டுமே நாம் அறிவோம்.

---